பக்கங்கள்: 11
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 29 சனிக்கிழமை 12.06.2021 கதிர் 85

## பேக்கரி பொருள்களின் விலையும் அதிகரிக்கும்

பாண் தவிர ஏனைய அனைத்து பேக்கரிப் பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ள நிலையிலேயே, விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

# ‘தாமரை மொட்டு’ அரசு ஒரு தேசிய அவமானம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு ஒரு தேசிய அவமானம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

உங்களால் முடியவில்லை என்றால் முடியாது என்று கூறுங்கள் என்றும் அரசிடம் அவர் தெரிவித்துள்ளார்.

2



## எகிறும் மரண வீதம்; மேலும் 62 பேர் பலி!

### கொரோனா மொத்தச் சாவு 2,073



நாட்டில் மேலும் 62 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

அரச தகவல் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 31 முதல் ஜூன் 08 ஆம் திகதி வரை 07 பேரும், ஜூன் 1 முதல் 10 வரை 55 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2

## யாழ். மாவட்ட மக்கள் மிகவும் அவதானம்!

### அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை

**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில் பொது மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்று குறைந்த நிலைமை இல்லாது அதிகரித்த நிலையே காணப்படுகின்றது

நேற்று கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர்.

2

## முள்ளியவளையில் நால்வர் சிக்கினர்!

முள்ளியவளை - வற்றாப்பளை வீதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி வீதியில் பயணித்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வர் முள்ளியவளைப் பொலிஸாரால் இன்று நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பயணத்தடை காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் இருந்து வற்றாப்பளைக்குச் சென்ற புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவர் மற்றும் வற்றாப்பளையைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டு முள்ளியவளை

2

## கடற்பகுதி ஆய்வின் பின்பே மீன்பிடி நடவடிக்கை ஆரம்பம்

### பிரதமர் மஹிந்த ஆலோசனை



விபத்துக்குள்ளான ‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பலால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ள பாணந்துறை முதல் நீர்கொழும்பு வரையான கடற்பகுதியில் முறையான ஆய்வுக்குப் பின்னர் விரைவாக மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

‘எக்ஸ் - பிரஸ் பேர்ள்’ கப்பல்

2

## 22 வீத மாணவர்கள் மட்டுமே ஒன்லைன் மூலம் கல்வி கற்றல்

இலங்கையில் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகக் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

ஒன்லைன் தொழில்நுட்பத்தின் உதவியுடன் கல்வி நடவடிக்கையை

2

## கொரோனாச் சட்ட விதியை மீறிய 30 ஆயிரம் பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய மேலும் 1,027 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் 30 ஆயிரத்து 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தலங்கம பகுதியில் ட்ரோன் கமராக்கள் மூலம் நேற்று நடத்தப்பட்ட கண்காணிப்பின்போது, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் 14 பகுதிகளில் நேற்று மாத்திரம் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

2

### Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 07இற்கான விஞ்ஞானப் பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப் பட்டுள்ளது.**

### 22 வீத மாணவர்கள் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்க கல்வி அமைச்சு முயற்சித்து வருகின்றது. எனினும், இந்த முயற்சிகள் ஊடாக நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 22 வீத மாணவர்கள் மட்டுமே தமது கல்வியைத் தொடர்வதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களின் கல்வியை மீட்டெடுப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் குறித்து இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஆசிரியர், அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இடையே கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மாற்றுத் திட்டமாக அனைத்து அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமூகமயமாக்கல் குறித்த மாணவர்களின் மனப்பான்மையை வளர்ப்பதற்கு விரிவுரைகளுக்குப் பதிலாக கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் இதன்போது பரிந்துரைக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக எந்தவொரு உதவியையும் வழங்க தயாராக உள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### எகிறும் மரண வீதம்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

### கடற்பகுதி ஆய்வின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல், மீன்வளம், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்தி, கப்பல் தீயால் ஏற்பட்ட சேதங்களை முழுமையாக மதிப்பிடவும், சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடமிருந்து முழு இழப்பீட்டைப் பெறுவதற்கும், கப்பலை வெளியேற்றுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவித்தார்.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை கப்பல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் எனவும் பிரதமர் இதன்போது உறுதியளித்தார்.

### கொரோனாச் சட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, மாகாண எல்லைகளை மீறிப் பயணித்த 91 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இன்றும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

### யாழ். மாவட்ட மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனை முடிவுகளின்படி 139 நபர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது .இன்று காலை கிடைத்த பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளில்19 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மொத்தமாக 4 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது. இன்று வரை 53 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன. அதில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் மற்றும் உடுவில் பிரதேச பிரிவுகளில் இரு கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன.

யாழில் 2 ஆயிரத்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 712 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தற்போது சற்று கொரோனா நிலைமை அதிகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றதே தவிர குறைந்ததாக இல்லை. எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன – என்றார்.

### முள்ளியவளையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

### 'தாமரை மொட்டு' ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இது குறித்து 'ருவிட்டர்' பதிவொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசே வெட்கமாக இருக்கின்றது. நீங்கள் ஒரு தேசிய அவமானம். உங்களால் நிர்வகிக்க முடியாவிட்டால் முடியாது என்று கூறுங்கள். ஐக்கிய மக்கள் சக்தி செழிப்பான மற்றும் அபிவிருத்தியின் சகாப்தத்தை உருவாக்கும் என்றும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மடி வலைக்கு இறக்கும் ஆப்பு

வடக்குக் கடலில் மீன் வளத்தைப் பெருக்குதல் என்ற பெயரில் இலங்கைக் கடற்றொழில் அமைச்சும் அதன் திணைக்களமும், இலங்கைக் கடற்படையுடன் ஆரம்பித்திருக்கும் நடவடிக்கை இலங்கை – இந்திய மீனவர் உறவில் மற்றொரு உரசலுக்கு வலை விரிக்கும் வேலையாகவே தோன்றுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கைவிடப்பட்ட பழைய பஸ்களின் 'பொடி'களை, இலங்கைக் கடல் எல்லையை ஒட்டி கடலில் இறக்கும் பணியை இலங்கைக் கடற்றொழில் அமைச்சு முன்னெடுத்திருக்கின்றது.

விஞ்ஞான ரீதியில் கடல் வளத்தைப் பெருக்குவதற்கான ஒரு திட்டம்தான் இது. இவ்வாறு பழைய கப்பல்கள், பெரிய வாகன சிதிலங்கள் கடல் படுக்கையில் கிடக்கும் போது மீன் போன்ற கடல் உணவு உயிரினங்களின் பெருக்கம் அபரிமிதமாக அதிகரிப்பது விஞ்ஞான ரீதியான தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. மீனினங்கள் போன்றவை முட்டையிட்டுப் பெருக, கடல் நீரோட்டம் தடைப்பட்டிருக்கும் இத்தகைய மறைவான கட்டமைப்புகள் தாராளமாக உதவக் கூடும்.

ஆனால், இந்தத் திட்டத்துக்கு இலங்கைத் தரப்பு செலவிடும் பெருமளவு நிதியை நோக்கும் போதும், அது மேற்கொள்ளப்படும் காலத்தைக் கவனிக்கும் போதும், இத் திட்டத்தின் பெறுபேறுகளை அவதானிக்கும் போதும், இந்த நடவடிக்கையின் பின்னால் புதைந்திருக்கும் நோக்கம் வெறுமனே கடல் உயிரினப் பெருக்கத்தைத் தூண்டுவதாக மட்டுமே இருக்கும் என்று தோன்றவில்லை.

கடலில் மீன் பெருக்கத்தை உருவாக்குவதற்காக சுமார் ஒன்றரை மாதம் தமிழக மீனவர்கள் கடலில் இறங்கத் தடை விதிக்கப்படுகின்றது. அந்தக் காலம் இப்போதுதான். அடுத்த மாதம் நடுப்பகுதி வரை அது நீடிக்கின்றது. அவர்கள் தமது கடல் பிரதேசத்தில் தங்கி நின்று கூட நோக்க முடியாத சமயத்தில் இந்தப் பழைய பஸ்'பொடி'கள் ஆங்காங்கே கடலுக்குள் இறக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

கடல்படுக்கையின் அடி நிலம் வரை வலைகளைத் தாழப் பரப்பி விரித்து, கடல் வளத்தை அடியோடு அள்ளும் மடி வலை, இரட்டை மடி வலை மீன் பிடிப்புக்கு இலங்கையில் சட்ட ரீதியாகத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அத்தகைய முறைமையில் மீன் பிடியில் இலங்கை மீனவர்கள் ஈடுபடுவதில்லை.

ஆனால், இந்த முறைமைக்கு இந்தியாவில் தடை இல்லை. அதனால் இந்திய மீனவர்கள் பெரும்பாலும் மடிவலை அல்லது இரட்டைமடி வலை விரிப்பிலேயே ஈடுபடுகின்றனர். அத்தகைய வலைகளைக் கொண்டு வந்து, இலங்கைக் கடற்பரப்புக்குள் அவ்வப்போது ஊடுருவி, இங்குள்ள கடல் வளத்தைக் கடல் படுக்கையோடு சூறையாடி அவர்கள் அள்ளிச் செல்லுகின்றனர் என்பதுதான் அத்துமீறும் – எல்லை கடக்கும் – இந்திய மீனவருக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டாகும்.

மீன் வளத்தை பெருக்குதல் என்ற பெயரில் கடல் படையுடன் சேர்ந்து இலங்கைக் கடற்றொழில் அமைச்சு இத்தகைய அத்துமீறும் – எல்லை தாண்டும் – இந்திய மீனவருக்கு விரிக்கும் வலை அல்லது இறக்கும் ஆப்புதான் இந்த பஸ் 'பொடி'களின் கடல் இறக்கம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்திய மீனவர்கள் ஊடுருவி கடல் படுக்கை வரை மடி வலைகளை விரிக்கும் பிரதேசங்களை இலக்கு வைத்தே இந்த பஸ் சிதிலங்கள் இறக்கப்படுகின்றன என்று அந்த வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இத்தகைய பாரமான பஸ் சிதிலங்கள் இறக்கப்பட்ட கடல் பகுதிகளில், சமுத்திர நிலப் படுக்கை வரை மடி வலை விரிக்கப்பட்டால், அவை வாரி இழுக்கப்படும் போது பஸ் சிதிலங்களில் மாட்டி, முழுமையாகச் சேதமாகும் என்று கூறப்படுகின்றது. ஒவ்வொரு தடவையும் வலைகள் சிக்கும்போது, ஒவ்வொரு ட்றோலர் உரிமையாளரும் இந்தியப் பணத்தில் சுமார் ஐம்பதாயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரையான வலைகளை இழக்கும் நெருக்கடி ஏற்படும்.

இலங்கைக் கடல் பிரதேசத்துக்குள் மடிவலை விரித்தால் வலைகளுக்கு ஆபத்து ஏற்படும் என்ற நெருக்கடியை ஏற்படுத்துவதன் மூலம் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் பிரதேசத்துக்குள் ஊடுருவுவதைக் கட்டுப்படுத்த இந்நடவடிக்கை மூலம் இலங்கைத் தரப்பு முயலுகின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனாலும் எல்லைப் பிரதேசத்திலும், கடல் போக்குவரத்துப் பாதையிலும் இத்தகைய நடவடிக்கைகளை இலங்கைத் தரப்பு எடுக்க முன்னர் இது தொடர்பில் நாட்டுக்குள்ளேயும், சர்வதேச ஏற்பாடுகளின்படியும் சட்ட மீறல் ஏதும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

சர்வதேச சட்டங்கள், பட்டயங்கள், வழக்காறுகள், ஒழுக்க முறைகளை இவ் விடயத்தின் மூலம் இலங்கை மீறுகின்றது என்ற குற்றச்சாட்டு இந்தியத் தரப்பில் இருந்து வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## 'விடுதலை செய் அல்லது எம்மைக் கருணைக் கொலை செய்' இலங்கைத் தமிழர்கள் திருச்சி முகாமில் தொடர் போராட்டம்!



திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்மை விடுதலை செய்ய வேண்டும் இல்லையேல், கருணைக் கொலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியே இன்று (சனிக்கிழமை) நான்காவது நாளாகவும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழக முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நேற்று போராட்டக்காரர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தொலைபேசி ஊடாக பேசியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுடன் பேசுவேன் எனவும் செல்வம் அடைக்கலநாதன் தொலைபேசி ஊடாக உறுதிமொழி வழங்கியுள்ளார்.

## புதிய சுற்றாடல் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளிப்பு

புதிய சுற்றாடல் சட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் சட்டங்களை மீறுவோருக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை, புதிய சட்டத் திருத்தத்தினூடாக அதிகரிக்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அமுலிலுள்ள 5 ஆயிரம் ரூபா அபராதத் தொகையை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதுவரை சதுப்பு நிலம் என்ற பதத்திற்கு காணப்பட்ட குறைபாடு, புதிய சட்ட திருத்தத்தினூடாக மறுசீரமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரசாயன பயன்பாடு தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

## குற்றப்புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பணிப்பாளராக முதலாவது நியமிக்கப்பட்ட பெண் இமோ முதுமால!







குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு பெண் ஒருவர் முதன்முறையாக நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமோ முதுமால குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## மன்னாருக்கு சுகாதார உபகரணங்கள் அரசசார்பற்ற அமைப்புகளால் வழங்கல்



அரச சார்பற்ற அமைப்புக்களால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்களை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், சுகாதார துறையினரிடம் நேற்று (வெள்ளிக்கிழமை) கையளித்தார்.

முகக்கவசம், தொற்று நீக்கி உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பொருள்களே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கும், மன்னாரில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் வழங்கி வைக்கும் நோக்கில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மலினால் இவை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தெற்காசிய சிறுநீரக வைத்தியசாலை பொலன்னறுவையில் திறக்கப்பட்டது



பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தெற்காசியாவின் பாரிய சிறுநீரக வைத்தியசாலையான தேசிய சிறுநீரகவியல் சிறப்பு வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

2015 ஆம் ஆண்டு சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டிந்த அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த வேண்டுகோளுக்கு அமைய சீன அரசாங்கத்தால் இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டது.

# இங்கிலாந்தில் ஜி–7 உச்சி மாநாடு

## உலக தலைவர்கள் நேரில் சந்திப்பு






தொழில் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, கனடா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய 7 நாடுகளை உள்ளடக்கியது ஜி-7 கூட்டமைப்பு. இந்தக் கூட்டமைப்பின் 47-வது உச்சி மாநாடு இங்கிலாந்தின் கார்ன்வால் ம காணத்தில் நேற்று தொடங்கியது.

கடந்த 2 ஆண்டுகளில் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அல்லாமல் நேரில் சந்திப்பது இதுவே முதல் முறையாகும். இதனால் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.






அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், இத்தாலி பிரதமர் மரியோ தராகி, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா, பிரான்ஸ் அதிபர் மெக்ரான் மற்றும் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் ஆகியோருடன் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயென், ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்லஸ் மைக்கேல் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

கார்ன்வால் மாகாணத்தின் செயின்ட் ஐவ்ஸ் நகரில் உள்ள எழில் கொஞ்சும் கார்பில் பே பகுதியில் நேற்று தொடங்கிய இந்த மாநாடு இன்றும், நாளையும் தொடர்கிறது. முன்னதாக, நேற்று இந்த மாநாடு தொடங்குவதற்கு முன்பாக ஜி-7 நாடுகளின் தலைவர்கள் மற்றும் ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐரோப்பிய கவுன்ஸிலின் தலைவர்கள் சமூக இடைவெளியை கடைப்பிடித்து குழு படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிலையில், கதவுகள் மூடப்பட்ட அறைக்குள் ஜி-7 மாநாட்டின் முதல் நாள் கூட்டம் தொடங்கியது.

மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், கொரோனாத் தொற்றால் உலகம் எதிர்கொண்ட மோசமான விளைவுகள் பற்றியும், உலக நாடுகளின் பொருளாதாரம் மீட்டெடுக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும் பேசினார். தொடர்ந்து ஒவ்வொரு தலைவர்களாக தங்களின் தொடக்க உரையை வழங்கினர்.

பரபரப்பான சூழலில் தொடங்கியுள்ள இந்த மாநாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய சவாலை ஜி-7 நாடுகளின் தலைவர்கள் எதிர்கொண்டுள்ளனர் என சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் உள்ளிட்ட உதவிகளை பணக்கார நாடுகள் வழங்கி உதவ வேண்டும் என்று சர்வதேச நெருக்கடி அதிகரித்து வரும் சூழலில், இந்த மாநாடு நடைபெறுவதால் கொரோனாத் தடுப்பூசி விநியோகம் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்றும் தெரிகிறது. கொரோனாவுக்கு அடுத்தபடியாக வளர்ந்து வரும் சர்வதேச பிரச்சினையாக இருப்பது பருவநிலை மாற்றம். எனவே பருவநிலை மாற்றத்திற்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்த மாநாட்டில் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் பல முக்கிய முடிவுகளை எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள ஜோ பைடனின் முதல் வெளிநாட்டு பயணம் என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரான்ஸ் அதிபரை அறைந்த நபருக்கு 4 மாதம் சிறைவாசம்

பிரான்ஸ் அதிபர் மெக்ரானை கன்னத்தில் அறைந்தமை தொடர்பாக டேமியன் தாரெலுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அதிபரை கன்னத்தில் அறைந்தமையை ஒப்புக்கொண்ட டேமியன் தாரெல், எல்லோரும் தன்னை கவனிக்க வேண்டும் என்கிற நோக்கில் இதை செய்தேன் என கூறினார். அதனைத் தொடர்ந்து அவருக்கு 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்த நீதிபதிகள், அதில் 14 மாதங்களை ரத்து செய்துவிட்டு 4 மாதங்கள் சிறையில் கழிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

முன்னதாக, கடந்த சில தினங்களுக்கு முன்பு நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள டெய்ன் எல் ஹெர்மிடேஜ் நகரில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தை ஆய்வு செய்வதற்காக சென்றிருந்த பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரானை கூட்டத்தில் இருந்த ஒரு நபர் ஒருவர் திடீரென கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

இதையடுத்து மெக்ரானை கன்னத்தில் அறைந்த டேமியன் தாரெல் என்கிற வாலிபரையும், இந்த சம்பவத்தை தனது செல்போனில் படம் பிடித்த மற்றொரு நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதற்கிடையே வாலிபர் தனது கன்னத்தில் அறைந்த விடயத்தைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை எனக்கூறிய அதிபர் தனிப்பட்ட முறையில் அந்த வாலிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# உலகளாவிய ரீதியில் கொரோனா உயிரிழப்பு 38 லட்சத்தைக் கடந்தது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது.

இந்நிலையில், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 38 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், உலக அளவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 17 கோடி 60 லட்சத்தைக் கடந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து 15 கோடி 96 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1 கோடி 25 லட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 85 ஆயிரத்துக்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், பிரான்ஸ், துருக்கி ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

# உலகின் மிகப்பெரிய பனித்தீவு உருகி வருவதாக எச்சரிக்கை


அண்டார்டிக்காவில் உள்ள மிகப்பெரிய பனித்தீவு வேகமாக உருகி வருவதால் அடுத்த 20 ஆண்டுகளில் காணாமல் போய் விடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அண்டார்டிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள பைன் தீவு முழுவதும் பனிப் பாளங்களால் உருவானது. பருவநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமயமாதல் போன்ற காரணிகளால் பைன் தீவு வேகமாக உருகி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் கடந்த 3 ஆண்டுகளில் தீவின் ஓரங்கள் பெரும்பாலும் அரிக்கப்பட்டு அமன்ட்சென் கடலுக்குள் கரைந்து போனது தெரியவந்தது.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்த தீவு முழுவதும் கரைந்து போகும் என்றும் இதனால் அண்டார்க்டிக்கா பகுதியில் கடல் நீர்மட்டம் ஒரு அடிக்கும் மேல் உயரும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.






## பால்வெளி மண்டலத்தில் 25 ஆயிரம் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும்

# புதிய மின்னும் நட்சத்திரம் கண்டுபிடிப்பு



பால்வெளி மண்டலத்தில் மின்னும் புதிய நட்சத்திரம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சிலி நாட்டிலுள்ள விஸ்டா என்ற தொலைநோக்கி கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் இந்த VVV-WIT-08 என்ற நட்சத்திரத்தைக் கண்டறிந்தனர். ஏறத்தாழ 25 ஆயிரம் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும் இந்த நட்சத்திரம் அவ்வப்போது மிகவும் பிரகாசமாக ஒளிர்வதைக் கண்டுபிடித்துள்ளனர்.


துணைக் கோள் ஒன்றினை இந்த நட்சத்திரம் சுற்றி வருவதால் அந்தத் துணைக் கோளிடமிருந்து வெளிச்சத்தை உள்வாங்கி, பின்னர் வெளியிடும் தன்மையை VVV-WIT-08 நட்சத்திரம் பெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


இதன் அருகிலேயே சூரியனை விட 100 மடங்கு பெரிதான மற்றொரு நட்சத்திரம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ள விஞ்ஞானிகள் அதுகுறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

# செவ்வாயை படம்பிடித்த ஜுராங் ரோவர் அரிய படங்களை வெளியிட்ட சீனா

சிவப்பு கிரகம் என அழைக்கப்படும் செவ்வாயில் ஜுராங் (Zhurong) ரோவர் எடுத்த படங்களை சீனா வெளியிட்டு உள்ளது. செவ்வாய் கிரகம் குறித்த ஆராய்ச்சிக்காக சீனா கடந்த ஆண்டு லாங் மார்ச்-5 என்ற ரொக்கெட் மூலம் தியான்வென் விண் கலத்தை விண்ணில் செலுத்தியது.

இந்த விண்கலம் கடந்த மாதம் 22 ஆம் திகதி செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது. அதிலிருந்த ஜுராங் என்ற ரோவர் தற்போது ஆய்வுகளை மேற்கொண்டுவருகிறது. இந்நிலையில் அந்த ரோவர், தான் தரையிறங்கிய தளம், செவ்வாயிலுள்ள மண் உள்ளிட்ட 3 படங்களை அனுப்பியுள்ளது.







## பாகிஸ்தானில் பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில்

# 20 பேர் உயிரிழந்தனர்

பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் உள்ள குஜ்தார் மாவட்டத்தில் நடந்த மத நிகழ்வில் பங்கேற்று ஏராளமானோர் பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது வளைவு ஒன்றில் பஸ் வேகமாகத் திரும்பியதால் கட்டுப்பாட்டினை இழந்து அருகிலிருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர். மேலும் 40க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என அச்சம் ஏற்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பிரதேச செயலகத்தின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் கல்குவாரி

## திருக்கோவில் கிராம மக்கள் கவலையும், விசனமும் தெரிவிப்பு



திருக்கோவில், பிரதேச சபைக்குட்பட்ட மண்டானை - சாகமம் பகுதியில் பிரதேச செயலகத்தின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் கல்குவாரி குறித்து கிராம மக்கள் கவலையும், விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.

குறித்த கல்குவாரி எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்று மண்டானை கிராம மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிர்மாணப்பணியினால் ஒலி மற்றும் காற்று மாசுபாடு என்பவற்றை எதிர்நோக்கக் கூடும் என்றும், கனரக வாகனங்களின் போக்குவரத்தினால் ஏற்கனவே சேதமடைந்துள்ள மண்டானை கிராம வீதி மேலும் பாதிப்படையக் கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

நிர்மாணப் பணிகளை உடன் நிறுத்துமாறு திருக்கோவில் பிரதேச செயலக மற்றும் பிரதேச சபையின் உத்தரவுகள் இருந்தபோதிலும் நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை கவலையளிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே கல்குவாரி நிர்மாணப் பணிகளை தற்போதைய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றியமைத்து முன்னெடுக்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இந்த கல்குவாரி நிர்மாணப்பணிகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் தங்கையா கஜேந்திரன், கல்குவரி நிர்மாணத்தினை மேற்கொள்ளும் நபர், கல்குவாரியை நிர்மாணிப்பதற்கான அனுமதிகளை ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் அந்த கல்குவாரியை எந்த இடத்தில் நிர்மாணிக்க வேண்டும் என்பது தொடர்பான அனுமதியினை அவர் திருக்கோவில் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பவற்றிடமிருந்து இதுவரை பெறவில்லை.

எனவே பிரதேச செயலக மற்றும் பிரதே சபை அனுமதியின்றி அரச காணியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்குவாரி நிர்மாணப் பணிகளை உடன் நிறுத்துமாறு சாகமம் கிராம உத்தியோகத்தர் பார்த்திபனூடாக சம்பந்தப்பட்ட நபருக்கு கடந்த 30 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்துள்ளோம். அதேநேரம் காணி தொடர்பான உரிய ஆவணங்களுடன் என்னை பிரதேச செயலகத்தில் வந்து சந்திக்குமாறும் சம்பந்தப்பட்ட நபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் இன்று வரை (2021.06.11) என்னை வந்து சந்திக்காத நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதிக்குள் பிரதேச செயலகத்துக்கு சமூகமளித்து என்னை சந்திக்குமாறு மீள் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பினையும் அவர் புறக்கணித்து செயற்படும் பட்சத்தில் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருக்கோவில் பிரதேச சபையினூடாக சாகமம் கிராம சேவகரினால் நிர்மாணப் பணிகளை உடன் நிறுத்துமாறு சுவரொட்டிகளும் குறித்த கல்குவாரி தொழிற்சாலையின் நிர்மாணக் கட்டடத்தில் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசின் நகர அபிவிருத்தித் திட்டத்தில்

# திருகோணமலை மாவட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் புறக்கணிப்பு – இம்ரான் எம்.பி.கடிதம்

அரசாங்கத்தின் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தில் திருகோணமலை மாவட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையால் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சருக்கு அவர் எழுதிய கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் நகர அபிவிருத்தி யோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், சேருவில, பதவிசிறிபுர மற்றும் குச்சவெளி பிரதேசத்தின் புல்மோட்டை ஆகிய பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருகோணமலை மாவட்டம் பல்லின சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். இங்கு நீண்ட காலமாக இன ஒற்றுமை பேணப்பட்டு வருகின்றது.

திருகோணமலை, வெருகல் போன்ற பிரதேசங்கள் தமிழ் மக்களை அதிகமாகக் கொண்ட பிரதேசங்கள். கிண்ணியா, மூதூர், குச்சவெளி, தம்பலகமம் போன்ற பிரதேசங்கள் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்கள். அதேபோல கந்தளாய், சேருவில, மொரவெள, கோமரங்கடவெல, பதிவிசிறிபுர போன்ற பிரதேசங்கள் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களாகும்.

நாட்டில் வாழ்கின்ற சகல மக்களையும் உள்ளடக்கிய வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கையாகும். இந்தக் கொள்கை திருகோணமலை மாவட்ட நகரத் தெரிவில் கவனத்தில் கொள்ளப்படாமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன்.

எனவே, இந்தக் குறையினை நிவர்த்திக்கும் பொருட்டு கிண்ணியா, மூதூர் மற்றும் வெருகல் போன்ற பிரதேசங்களையும் இந்த நகர அபிவிருத்தி திட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கோறளைப்பற்று மத்தி பிரிவில் மேலும் 18 பேருக்கு கொரோனா

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை 81 நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் படி 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரிகளால் பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் வழிகாட்டலில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரி.நஜீப்காப் தலைமையில் இடம்பெற்று வருகின்றது.



## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 103 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு மாவட்டத்தில் 103 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் எழுமாறாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் கீழ் உள்ள சுகதார வைத்திய அதிகாரி பிரிவுகளான

களுவாஞ்சிக்குடி -12, காத்தான்குடி -18, ஓட்டமாவடி -01, கோரளைப்பற்று மத்தி -27, செங்கலடி -03, ஏறாவூர் -31, பட்டிப்பளை -02, ஆரையம்பதி -04, கிரான் -03 என்ற அடிப்படையிலும், மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 103 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டதாக தெரிவித்தார்.

# சிறுவர் உட்பட பத்து பேருக்கு கொரோனா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் சிறுவர் உட்பட 10 பேர் கொரோனாத் தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளனர் என, அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் நேற்று தெரிவித்தார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் 10 பேர் கொரோனாத் தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளனர் என்றும், இதுவரை தமது பிரிவில் 160 பேர் கொரோனாத் தொற்றாளராக அடையாளப்படுத்தப்பட்டு தற்போது, 21 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவித்த அவர், 4 பேர் மரணித்துள்ளமையுடன், 37 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில் வீடுகளில் உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு





# இந்தியாவில் குறையாத கொரோனா உயிரிழப்பு

## ஒரேநாளில் 4,002 பேர் பலி; புதிதாக 84,332 பேருக்குத் தொற்று

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பின் இரண்டாவது அலை மெல்ல மெல்ல கட்டுக்குள் வரத்தொடங்கியுள்ளது. ஐந்தாவது நாளாக இன்றும் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கும் குறைவாகவே பதிவாகியுள்ளது.

நேற்றைய உயிரிழப்பு எண்ணிக்கையான 2,197 உடன் பீகாரின் 3,951 உயிரிழப்புகள் சேர்க்கப்பட்டு நேற்று மட்டும் இந்தியாவில் புதிய உச்சமாக ஆறாயிரத்து 148 பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 4,002 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அங்கு கடந்த 24 மணிநேரத்தில் 84 ஆயிரத்து 332 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதனால் மொத்த கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை 2 கோடியே 93 லட்சத்து 59 ஆயிரத்து 155 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாப் பாதிப்பால் ஒரேநாளில் மேலும் 4,002 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 3,67,081 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 311 பேர் குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர். இதனால் மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 2 கோடியே 79 லட்சத்து 11 ஆயிரத்து 384 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாப் பாதிப்புக் காரணமாக தற்போது 10,80,690 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தியாவில் இதுவரை செலுத்தப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 24 கோடியே 96 லட்சத்து 304 ஆகுமென்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் சிறையில் உள்ள ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த இந்தியப் பெண்கள் நாடு திரும்பமுடியாது

13 நாடுகளைச் சேர்ந்த ஐ.எஸ். அமைப்பின் 408 உறுப்பினர்கள் ஆப்கானிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் 4 இந்தியர்கள், 16 சீனர்கள், 299 பாகிஸ்தானியர்கள், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்தவர்கள் தலா 2 பேர் அடங்குவர். ஆப்கானிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் இந்தியா இந்த விடயத்தில் என்ன செய்யப்போகிறது என்பதைப் பற்றி அறியக் காத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த 4 இந்தியப் பெண்களும் இந்தியா திரும்புவதில் பல்வேறு அதிகார நிறுவனங்களிடையே ஒருமித்த கருத்து இல்லை என்றும் அவர்கள் மீண்டும் வர அனுமதிக்கப்படுவது சாத்திய



4 இந்தியப் பெண்கள். சிறைகளிலுள்ள கைதிகளை நாடுகடத்த ஆப்கானிஸ்தான் 13 நாடுகளுடன் பேச்சுகளைத் தொடங்கியுள்ளதாக இந்திய உயர் தூதரகத்தில் பொறுப்பில் உள்ள அதிகாரி ஒருவர் கூறி உள்ளார்.

ஆனால், அவர்கள் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு அனு மதிக்கப்பட வாய்ப்பில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டெல்லியில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரக அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டாலும், காபூலில் உள்ள மூத்த அதிகாரிகள் மில்லை என்றும் கூறப்படுகிறது. பெண்கள், தங்கள் குழந்தைகளுடன் காபூலில் உள்ள இந்திய பாதுகாப்பு நிறுவனங்களால் 2019 டிசெம்பரில் விசாரிக்கப்பட்டனர்.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது ‘இங்குள்ள நடைமுறைகளில் அவர்கள் திரும்பி வருவதற்கு ஒப்புதல் பெற அனுமதிப்பதே கடினமானது. இருப்பினும், அவர்கள் மிகவும் தீவிரமானவர்கள் என்பதை அவர்களுடனான விசாரணைகள் வெளிப்படுத்தியிருந்தன’ என்று அந்த குறிப்பிட்டுள்ளார்.



இந்தியாவிலிருந்து கடலுணவுகள் இறக்குமதி

# தொற்று உறுதியானதால் சீனாவில் ஒருவாரத்தடை

கொரோனா அச்சம் காரணமாக சீனா கடந்த வருடத்தில் இருந்து வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் உறைந்த கடல் உணவுகளைப் பரிசோதனை செய்து, கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர்தான் தனது நாட்டில் விற்பனைக்கு அனுமதி அளிக்கிறது.

இந்தியாவைச் சேர்ந்த ஆறு கடல் உணவு தயாரிப்பு நிறுவனங்கள் உறைந்த கடல் உணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்துவரும் நிலையில் இந்த நிறுவனங்களின் பொதிகளை சீன சுங்கஅதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது பொதிகளில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் ஒரு வாரத்திற்கு இந்திய நிறுவனங்களிடமிருந்து கடல் உணவை இறக்குதி செய்ய சீன அரசு தடை விதித்துள்ளது. இந்த அறிவிப்பு நேற்றைய தினம் வெளியாகியுள்ளது.

# தடுப்பூசி செலுத்தியதால் உடலில் காந்த சக்தியா ?



## பரபரப்பை ஏற்படுத்தியுள்ள மகாராஷ்டிரா நபர்!

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த 76 வயதான அரவிந்த் சோனார் என்பவர் அண்மையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொண்டார். முதல் தடுப்பூசி செலுத்தியபோது அவருக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் ஆனால், இரண்டாவது தடுப்பூசி செலுத்திய பின்னர் தனது உடலில் காந்த சக்தி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவரது உடலில் எந்தப்பாகத்தில் இரும்புப் பொருள்களை வைத்தாலும் அவை ஒட்டிக்கொள்வதாகத் தெரிவித்து காணொலியை அவர் பகிர்ந்திருக்கிறார்.

அவர் கையில் இரும்புக் கரண்டி, நாணயங்களை வைத்தால் அப்படியே ஒட்டிக்கொள்கின்றனவாம். குடும்பத்தில் உள்ளவர்கள் ஆரம்பத்தில் இதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் வியர்வையில்தான் அவை ஒட்டிக்கொள்கின்றன என்றே நினைத்தோம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், தொடர்ந்து இது போல நடக்கவே, இதனை ஒரு காணொலியாக எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று சோதித்த போது, அவர்களாலும் காரணம் எதையும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. நாசிக் மாநகராட்சி மருத்துவமனை டாக்டர்களும் அரவிந்த் வீட்டிற்கே வந்து சோதனை செய்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இது குறித்து டாக்டர் அசோக் தோரட் என்பவர் கூறுகையில், ‘அரவிந்த் சோனாருடைய உடலில் நாணயங்களும் கரண்டிகளும் ஒட்டிக்கொள்ளும் காணொலியைப் பார்த்தேன். தடுப்பூசி செலுத்தப்பட்டதன் விளைவா இது என்பதை ஆய்வுக்கு உட்படுத்தியே சொல்ல முடியும். முழுமையான ஆய்வுக்குப் பிறகே இது குறித்து தெளிவான முடிவுக்கு யாராலும் வரமுடியும். தற்போதைக்கு ஆய்வு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மேற்கொண்டு ஏதாவது ஆய்வு தேவையெனில் நடத்தப்படும் என்றார்.

இந்த நிலையில், தடுப்பூசி போட்டுக்கொண்டதால் காந்த சக்தி ஏற்பட்டதாக அரவிந்த சோனர் கூறுவதை, மும்பையைச் சேர்ந்த ஜேஜே மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் டட்யாராவே லஹானே மறுத்துள்ளார். அவர் கூறும்போது, ‘உலகம் முழுவதும் ஏராளமானோருக்கு தடுப்பூசிப் செலுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற விளைவு யாருக்கும் ஏற்படவில்லை. அதனால், அதற்கும் உடலில் இரும்புப் பொருள்கள் ஒட்டிக்கொள்வதற்கும் சம்பந்தமில்லை. தடுப்பூசி போட்டுக் கொள்வதால் இதுபோன்ற எதுவும் நடக்காது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் ஆண்கள் பிரிவு

## ஜோகோவிச்-ஸிட்சிபாஸ் இறுதிப் போட்டிக்குத் தெரிவு





பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் தற்போது விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது. செம்மண் தரையில் நடைபெறும் சிறப்புமிக்க இத்தொடரில், தற்போது ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஜேர் மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், கிரேக்கத் தின் ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாசை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸ் 6-3, 6-3, 4-6, 4-6, 6-3 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபேல் நடாலை எதிர்கொண்டார். இந்தப் போட்டியும் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாமல் நடைபெற்றது. இப்போட்டியில் நோவக் ஜோகோவிச் 3-6, 6-3, 7-6, 6-2 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இறுதிப்போட்டி நாளையதினம் நடைபெறவுள்ளது.

# யூரோ கிண்ணக் கால்பந்துப் போட்டித்தொடர்

## துருக்கியை 3—0 என வீழ்த்தியது இத்தாலி



யூரோ கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடர் நேற்று தொடங்கியது. யூரோ கோப்பை போட்டியில் மொத்தம் 24 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தாலியின் ரோம் நகரில் நேற்றுத் தொடங்கிய முதல் லீக் ஆட்டத்தில் குரூப் ஏ பிரிவில் இடம்பிடித்துள்ள துருக்கி, இத்தாலி அணிகள் மோதின.

ரோமில் உள்ள ஒலிம்பிகோஸ்டேடியத்தில் நடந்த இந்தப் போட்டியில் இடைவேளை வரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இடைவேளைக்குப் பிறகு துருக்கி அணியின் கட்டுக்கோப்பு இழக்கப்பட்டது. பாதுகாப்பு அரணை உடைத்த இத்தாலி 3-0 என்று வெற்றி பெற்றது. 27 போட்டிகள் தொடர்ச்சியாகத் தோற்காத நிலையில் வந்த இத்தாலி அணி, அந்தச் சாதனையை நேற்றும் தக்கவைத்துக்கொண்டது.

# வெற்றிப்பாதையில் தென்னாபிரிக்கா தடுமாறுகிறது மே.இ.தீவுகள் அணி

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணி களுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் நிறைவில் தென்னாபிரிக்க அணி மிகவும் வலுவான நிலையில் இருந்தது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் அணி 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் டுக்களையும் இழந்தது. பதிலளித்த தென்னாபிரிக்கா 322 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக குயின்டன் டி கொக் 141 ஓட்டங்களைப் பெற்றார். மார்க்ரம் 60, வன் டெர்டசென் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். மே.இ.தீவுகளின் ஜேஸன் ஹோல்டர் 4, அறிமுகவீரர் ஜேய்டன் சீல்ஸ் 3, கெமர் ரோச் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அதையடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மே.இ.தீவுகள் அணி அடுத்தடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து, 82 ஓட்டங்களை எடுத்தி ருந்தது. ரபாடா, நோர்ட்ஜே இருவரும் தலா 2 விக்கெட் டுக்களை வீழ்த்தினர்.



# இலங்கைக்கு எதிரான கிரிக்கெட் தொடர் ஜூன் 14 ஆம் திகதி முதல் இந்திய அணி தனிமைப்படுத்தலில்

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இலங்கையில் தலா 3 ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடவிருக்கிறது. இந்தத் தொடரின் அனைத்துப் போட்டிகளும் கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் இந்திய அணியினர் மும்பையில் இருக்கும் ஹோட்டலில் 14 நாள்கள் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள இருக்கின்றனர். இந்திய அணியினர் தனிமைப்படுத்திக்கொள்ள இருக்கும் காலங்களில் அவர்களுக்கு மூன்று முறை கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

பின்பு ஜூன் 28 ஆம் திகதி மும்பையில் இருந்து இலங்கையின் கொழும்பு நகருக்குச்செல்லும் இந்திய அணியினர், அங்கு 7 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள். அதன் பின்பு பயிற்சிகளைத் தொடங்குவார்கள் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





ந.லோகதயாளன்

# கடலிலே காவியங்கள் படைத்த நாம் இப்போது பஸ் விடுகின்றோம்

கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களமும் கடற்றொழில் கூட்டுத்தாபனமும் இணைந்து வடக்குக் கடலில் பழைய பஸ் 'பொடி'களை இறக்கும் பணி இந்திய – இலங்கை மீனவரிடையே பனிப்போரை மேலும் அதிகரிப்பதாகவே அமையும் என்றே விடயமறிந்த வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

மீன்உற்பத்தியைபெருக்கும்நோக்கில்கைவிடப்பட்ட பஸ் 'பொடி'களை கடலில் இறக்கும் திட்டம் கடந்த ஆண்டு சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது காங்கேசன்துறை இருந்து 'சாயுறு' கப்பல் மூலம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையைக் கண்காணிப்பதற்காக கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்தனர். இவர்களுடன் மாவட்ட அதிகாரிகளும் கப்பலில் பயணித்துபஸ்'பொடி'களைஇறக்கும்நடவடிக்கைகளை நேரில் பார்த்தனர்.

போக்குவரத்துச் சபையின் பாவனையில் இருந்து கைவிடப்பட்ட பஸ் 'பொடி'கள் தேர்வு செய்யப்பட்டு இதற்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இரு நாள்களின் முன்பே எடுத்து வரப்பட்டு 10ஆம் திகதி மாலையில் கடற்றொழில் திணைக்களத்தின் 'சாயுறு' கப்பலில் ஏற்றப்பட்டன். நேற்று அவை கடலிற்குள் எடுத்துச் செல்லப்பட்டு இறக்கப்பட்டன.

பஸ் 'பொடி'களை ஏற்றிய சாயுறு கப்பல் இலங்கை கடற்பரப்பின் எல்லைப் பகுதிகள் ஊடாக காங்கேசன் துறையில் இருந்து 5 மணி நேர பயணத்தில் ஈடுபட்டது. இலங்கை கடல் எல்லைக்குள் இந்த பஸ் 'பொடி'கள் இறக்கப்பட்டன. இந்நடவடிக்கையின் போது ஒரு தடவையில் 4 பஸ் 'பொடி'கள் மட்டுமே கப்பலில் எடுத்துச் செல்லப்பட முடியும் என்பதனால் இந்தத் தடவை இப்பணி ஒரு வாரம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு கடலில் கடலுணவு உயிரினங்களின் இனப்பெருக்கத்தினை அதிகரிப்பதற்காக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலின் அடிப்படையில், வடக்குக் கடலில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றே கூறப்படுகின்றது.

அதாவது, கடலுணவுஉயிரினங்களின்இனப்பெருக்கத்திற்கு ஏதுவான கடல் பிரதேசங்களை அடையாளங்கண்டு, குறித்த பிரதேசத்தில், பாவனைக்கு பயனற்று கைவிடப்பட்ட இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் 'பொடி'களை இறக்கிவிடுவதன் மூலம் உயிரினங்களின் இனப்பெருக்கத்திற்கு ஏதுவான சூழலை உருவாக்கும் திட்டம் என அமைச்சரின் முகப் புத்தகத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

### பேராசிரியர் கருத்து

இவை தொடர்பில் ஓய்வுநிலை கடல்சார் பேராசிரியர் சூசை ஆனந்தன் கருத்து தெரிவிக்கையில் –

உள்ளூர் படுப்பு வலை அல்லது பாய்ச்சல் வலைத் தொழில் முழுமையாக பாதிக்கப்படும். போடப்படும் பஸ் சிதிலங்களில் மீனவர் படகுகள் மோதி அனர்த்தம் நேர்ந்து படகு கவிழ்ந்தால் கடற்றொழிலாளி இறக்கும் நிலைமையும் ஏற்படும். பஸ் சிதிலங்களை கடலில் இறக்கும் இடம் அடையாளப்படுத்தப்பட்டாலும் அவை பாரம் குறைந்த காரணத்தினால் கடல் நீரோட்டங்களினால் இடத்திற்கு இடம் நகரலாம். இதனால் மீனவர்களிற்கு ஏற்படும் நன்மையினை விடவும் தீமையே அதிகம் ஏற்படும். இது ஒரு நீண்டகால திட்டமிடப்படாத பணியாகவே அமையும்.

இந்த வகையில் மன்னாரில் சில தனிப்பட்ட மீனவர்கள் கைவிடப்பட்ட கார்கள், வான்களைக் கடலிற்குள் எடுத்துச் சென்று இறக்கிவிட்டு, பின்பு மீன் அதிகம் உற்பத்தியாகும் அப்பகுதியில் டைனமற் வைத்து மீன்பிடியில் ஈடுபடும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதனால் இறக்கப்படும் பஸ் சிதிலங்கள் இடத்திற்கு இடம் அடித்துச் செல்லப்பட்டாலும் இழப்பு ஏற்படும். அவ்வாறு அடித்துச் செல்லப்படாது அங்கே அதிக அளவில் மீன்கள் சேருமாக இருந்தால் சட்டவிரோத மீன்பிடியாளர்கள் வேறு இடங்களைத் தேடி அலையாது அந்த இடத்திற்குச் சென்று டைனமற்றைப் பயன்படுத்தி மீன்களை அள்ளும் நிலைமையும் ஏற்படலாம். அதன் போதும் மீன் வளம் பாதிக்கப்படும் என்றார்.

### மீனவர் பிரதிநிதி கூறுபவை

இது தொடர்பில் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் ஜஸ்ரின் சொய்சா கருத்து தெரிவிக்கையில் –

இவ்வாறு பஸ்களை இறக்குவதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. அதாவது மன்னாரில் தனிப்பட்ட மீனவர்களே தமது முயற்சியில் ஹயஸ், கார் என்பவற்றைக் கடலில் கொண்டு சென்று இறக்கியுள்ளனர். அதன் மூலம் நல்ல அறுவடையினையும் பெறுகின்றனர். ஆனால் சில இடங்களில் மட்டும் அவை போடப்பட்டுள்ளன என்பதனால் ஏனைய வகை மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் அந்த இடங்களைத் தவிர்ந்து தொழிலில் ஈடுபடுவர்.

அதாவது இவ்வாறான வாகனங்களை இறக்கும் இடத்தை அண்டிய பகுதிகளில் நண்டுவலை, சுறா வலை, திருக்கைவலை, கும்பிளாவலைஎன்பனவற்றினை ஆழ இறக்கி மேற்கொள்ளவே முடியாது.

அதிலும் விசேடமாக மடிவலை இழுக்கவே முடியாத நிலைமை ஏற்படும். எமது நாட்டில் மடிவலை இல்லாத காரணத்தினால் – அது இங்கு தடை செய்யப்பட்ட முறைமை என்பதால் – அதனால் எமது மீனவர்களிற்கு பாதிப்பில்லை. ஏனைய தொழில் முறைகள் பாதிக்கப்படும்.

இதேநேரம் யுத்த காலத்தில் மன்னாரில் மூழ்கடிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா' கப்பல் பகுதியுள்ள இடத்தில் இன்றும் நல்ல உற்பத்தி கிடைக்கின்றது.

இவ்வாறான வாகனங்கள் இறக்கும் இடங்களில், அவை கடலில் இறக்கப்பட்டு 3 மாதங்களில் அதிக விளைச்சலைப் பெற முடியும்.



ஆனால், நம் நாட்டில் தடை செய்யப்பட்ட – கடல் நிலப்படுக்கைவரை சென்று கடல் வளத்தை ஒரேயடியாக வாரி அள்ளும் மடிவலை மற்றும் இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தும் இந்திய மீனவர்கள், பஸ் 'பொடி'கள் விதைக்கப்படும் இப்பகுதிகளிற்குள் ஊடுருவுவார்களேயானால் அவர்கள் நிச்சயமாகத் தமது வலைகளை முழுமையாகக் கைவிட்டே திரும்பும் நிலைமையே ஏற்படும். – என்றார்.

### மாறும் காவியம்

இதேநேரம் கடலில் படகெடுத்துச் சென்று காவியம் படைத்த காலம் மாறி, இன்று கடலிலே பஸ் விடுவோம் என சிலர் முனைகின்ற நிலைமையிலேயே உள்ளோம். இதனால் நன்மை ஏற்பட்டால் வரவேற்போம். மாறாக, எம்மையும் இந்திய மீனவர்களையும் மோத விடும் நிலைமைஏற்படாமல்இருந்தால்அதுவரவேற்கத்தக்கது என நீண்டகால கடற்றொழில் அனுபவம் கொண்ட மாதகலைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

### இராமேஸ்வரம் மீனவர் சங்க பிரதிநிதியின் கருத்து

இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் பென்சின் கிளாஸ் யேசுராஜா தகவல் தெரிவிக்கையில் –

எமது நாட்டு மீன்பிடி முறைமையில் அனுமதிக்கப்பட்ட வலைகளை பயன்படுத்தும்போதும் அவை காற்றில் அகப்பட்டு கச்சதீவு வரை வரக்கூடும். அவ்வாறு வரும் சந்தர்ப்பத்தில் வலைகள் இந்த பஸ் சிதிலங்களில் சிக்குண்டால் வலையை அறுத்துவிட்டு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்படும். அதனால் எமக்கு 50 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரையில் நட்டம் ஏற்படும் என்பதனால் உடனடியாக வலையை அறுக்கும் முடிவிற்கு மீனவர்கள் செல்ல மாட்டார்கள். வலையின் நட்டத்தை ஈடு செய்ய, இந்த பஸ் சிதிலங்கங்களை மாட்டிய வலையுடன் இழுத்துக் கொண்டு சென்று பழைய இரும்பு விலைக்காவது விற்று, புதிய வலையை வாங்குவோம் என்ற முடிவிற்கும் தமிழக மீனவர்கள் வரக் கூடும். சாதாரணமாக 150 குதிரை வலு இயந்திரம் இருக்கும் இரண்டு படகுகள் இணையுமானால் அதுவும் நடக்கக்கூடிய ஒரு விடயமே.

இவ்வாறு 150 குதிரைவலுக் கொண்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டவை இராமேஸ்வரம் பகுதி ட்ரோலர்களில் மட்டும்தான். ஆனால் காரைக்கால், நாகைபட்டினம் ட்ரோலர்கள் 400, 450 மற்றும் 550 குதிரை வலு சக்தி கொண்ட இயந்திரங்கள் உடையவை. அவை தனியொரு படகே இந்த சுமார் இரண்டாயிரம் கிலோ கொண்ட பஸ் சிதிலங்களை மிக இலகுவாக இழுத்துச் சென்றுவிடும். அதன் பின்பு தேவையற்ற அரசியல் நெருக்கடிகளையும் குழப்பத்தையும் அது ஏற்படுத்தும். அந்த நோக்கில் மிகவும் இரகசியமாகத் திட்டமிடப்பட்ட ஒரு கபடச்சதி வேலையாகவே எமது மீனவர்கள்இதனைக்கருதுகின்றனர்.

இந்திய அரசு மீன் பெருக்கத்தை அதிகரிக்கச் செயற்கைப் பவளப்பாறைகளையே கடலில் உருவாக்குகின்றனர். இலங்கை அரசும் இந்த பஸ் 'பொடி'களை பழைய இரும்பு விலைக்கு விற்று, அந்தப் பணத்தில் அந்தப் பணியை மேற்கொண்டிருக்க முடியும். தற்பொழுது குறித்த பஸ்களை இறக்கும் இடங்கள் இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் இலங்கைகடற்பரப்புக்குள்ஊடுருவும் பகுதிகள் என இலங்கை கடற்படையினர் அடையாளமிட்ட பகுதிகளில் தான் இறக்கப்படுவதாக கூறப்படுவதன் மூலம் எமது சந்தேகம் மேலும் வலுக்கின்றது.

தற்போது இந்தியாவில் நிலவும் மீன்பிடித் தடைக் காலம் அடுத்த மாதம் முடிவுற்று மீன்பிடி ஆரம்பிக்க முன்பு அவசரமாக இப்பணிகள் இடம்பெறுவதால் மீன்பிடி ஆரம்பிக்கும் போது இதன் விளைவை அறிந்துகொள்ள முடியும்.– என்றார்.

### ரயில் பெட்டிகளையும் கடலில் இறக்கத் திட்டம்

எமது கடலில் இறக்கப்படும் பழைய பஸ் 'பொடி'களில் தமது மடிவலை சிக்குப்பட்டால், வலையுடன் சேர்த்து அந்த 'பொடி'களையும் இழுத்துச் சென்று பழைய இரும்பு விலைக்கு விற்போம் என்ற தமிழக மீனவர் தரப்பின், ஆவேசம் குறித்து நமது தரப்பு அதிகாரி ஒருவர் சிரித்துக் கொண்டு பதில் தந்தார்.

"நமது நாட்டில் ரயில்வேத் திணைக்களத்திடம் பழைய ரயில் பெட்டிகள் கழிக்க வழியின்றி பல நூற்றுக் கணக்கில் இடத்தையும் தண்டவாளங்களையும் நிறைத்துக் கொண்டு நிற்கின்றன. பஸ் பொடிகளை இழுத்துச் செல்வார்கள் எனின், பழைய ரயில் பெட்டிகளைக் கடலுக்குள் இறக்குவோம். அப்போது என்ன செய்வார்கள்? ரயில் பெட்டிகளை ட்ரோலர் கொண்டு இழுத்துப் பார்க்கட்டுமே!" – என்று ஏட்டிக்குப் போட்டியாகப் பேசினார் அவர்.

மேற்படி பஸ் 'பொடிகளை' கடலில் இறக்கும் திட்டம் இம்முறை தடங்கலுடன்தான் ஆரம்பித்திருக்கின்றது.

இத் திட்டத்தை முன்னரே செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், பஸ் 'பொடி'களை ஏற்றிச் சென்று கடலில் போட வேண்டிய 'சாயுறு' கப்பலின் கப்டனுக்குக் கடைசி நேரத்தில் கொரோனாத் தொற்று என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து பிறிதொருகப்பலின்கப்டன் மாற்றீடாக அழைத்து வரப்பட்டு அவர் மூலமே இப்பணி நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





**ஒரு காலத்தில் திறமையானவர்களை அழிக்க மதம் என்ற ஆயுதத்தை பயன்படுத்தி இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருக்கின்றது, ஏதோ ஒரு வகையில் அறிவுத்திறன் வாய்ந்தவர்கள் மிகுந்த காழ்ப்புணர்ச்சியில் கொலை செய்யப்பட்டவர்களாக இருக்கின்றனர்**

இந்த வாரம் இவர்

# மதம் என்ற கொலைவெறி ஆயுதத்தால் எரித்து கொன்று மறக்கப்பட்ட விஞ்ஞானி

# ஜியார்டானோ புருனோ

ப்ரியமதா பயஸ்

இத்தாலிய தத்துவவாதி, கணிதவியலாளர், வானவியலாளர், மிகச்சிறந்த எழுத்தாளர், எதிராளியை சிலேடையாக நையாண்டி செய்வதில் வல்லவர், நல்ல பேச்சாளர், இறையியலை சார்ந்து பேசுபவர், அறிவியலின் கலங்கரை விளக்கமாக இருந்தவர், ஐரோப்பாவின் மிகப் புத்திசாலியான மனிதர் என்று போற்றப்பட்டவர்தான் இந்த ஜியார் டானோ புருனோ.

இவர் ஒரு வடிவவியல், மொழியியலில் வித்தகர். மறுமலர்ச்சிகால இரசவாதி. 14ஆம் நூற்றாண்டின்சோக்ரடீஸ்எனப்போற்றப்பட்டவர்.அனைத்திற்கும் மேலாக வானியல் தந்தை கலீ லியோ கலீலியின் மிக நெருங்கிய நண்பர் என்று சொல்லப்படு கிறவர்.

மதத்தின் பேரால் இல்லாதொழிக்கப்பட்டமாபெரும் விஞ்ஞானி, உலகின் எந்தெந்த மூலைகளில் எப்படி எல்லாம் மதம் சார்ந்த கொடுமைகள் நடந்தன என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணத்தைச் சொல்ல முடியாது .

ஒரு காலத்தில் திறமையானவர்களை அழிக்க மதம் என்ற ஆயுதத்தை பயன்படுத்தி இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருக்கின்றது, ஏதோ ஒரு வகையில் அறிவுத்திறன் வாய்ந்தவர்கள் மிகுந்த காழ்ப்புணர்ச்சியில் கொலை செய்யப்பட்ட வர்களாக இருக்கின்றனர் – இதில் அறிவியல், விஞ் ஞானம் மதம் சமூக அந்தஸ்து ,திறமை எல்லாம் அடங்குகின்றன, தற்போது இடம்பெறும் கொலை களுக்கு நாம் கற் பிக்கும் காரணங்கள் போல அன் றைய காலத்தில் மதம் என்ற ஆயுதத்தை பயன்படுத்தி இப்படியான திறமையானவர்களைக் கொன்று சமாதி ஆக்கியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகவுள்ளது .இயேசு கிறிஸ்துவின் கொலை கூட அப்படியான ஒன்றே என கருதுகிறேன் – ஆட்சி வெறி, பதவி மோகம் இவற்றுக்கு மக்கள் செல்வாக்கு பெற்ற ஒரு மனிதன் பலிகொடுக்கப்பட்டு கடவுளாக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன் .

இந்தாலி நாட்டில் நேப்பிள்ஸ் நகரில் அமைந்துள்ள வெசுவியல் மலைக்குன்றில் உள்ள நோலா என்ற நகரத்தில் உள்ள சிசுலா என்ற கிராமத்தில் கி.பி. 1548 இல் புருனோ பிறந்தார். ரோமானியப் பேரரசு களின் காலத்தில் முக்கிய நகரங்களில் நோலாவும் ஒன்று. உயர் குடி மக்கள் எனப்படும், கிறித்தவ திருச் சபையின் துறவிகளின் மடங்களும் இங்குதான் கட்டப் பட்டன. இப்படி வரலாற்று சிறப்பு மிக்க இடத்தில்தான் புருனோ பிறந்தார்.

கிறித்தவ திருச்சபையின் புனிதநீர் தெளிக்கப்பட்டு ஞானஸ்ஞானம் வழங்கப்பட்டு . பிலிப்யோ புருனோ என்ற கத்தோலிக்க கிறித்தவப் பெயர் சூட்டப்பட்டது அவருக்கு. புருனோவின் தந்தை பயோவான்னி புருனோ. இவர்ஸ்பானிய இராணுவ அதிகாரி என்று கூறப்படுகிறது. 1561 இல் மதக்கல்வி பயிலவும், கிறித் தவ போதகராகவும் டொமினிகனிலுள்ள துறவிகள் மடத்திற்குச் சென்றார் புருனோ . அங்குள்ள பாதிரி களிடமும், சகோதரர்களிடம் தத்துவம், இறையியல், அறிவியல் போன்றவற்றில் அனுபவமும், அறிவும் பெற்றார். அங்குள்ள துறவி ஒருவரின் மேலுள்ள ஈடுபாட் டாலும், கிறித்தவ திருச்சபையாலும், பிலிப்போ புருனோ என்ற பெயரை ஜியார்டானோ புருனோ என மாற்றிக் கொண்டார். ஜியார்டானோ புருனோ 1575 இல் டொமி னிகனில் கிறித்தவ புனித துறவி பாதிரியார் ஆனார்.

கத்தோலிக்க கற்பித்தலில் உள்ள அறிவின் ஆதாரம் அறியும் முறை, நடைமுறையற்ற பழக்கவழக் கங்கள் பற்றியும் ஆராய புருனோ முயற்சிக்கிறார் அதன் விளைவாக, மதத்துரோகம் மற்றும் கிறித்தவ திருச்சபையை எதிர்க்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டார். இதனால் 1576 இல் தனது கிறித்தவ துறவி வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார் புருனோ. அறிவைப் பற்றிய காதலும், அறியாமைப் பற்றிய வெறுப்பும் புருனோவை ஒரு புரட்சியாளனாக மாற்றியது. பாரம்பரிய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால் தனிமைப்படுத்தப்பட்டார். இதன் விளைவாக நாடோடியாக பல நாடுகளில் அலைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனாலும் உண்மைகளை வெளியிடுவதில் அவர் தயக்கம் காண்பிக்கவில்லை. அதில் ஒன்றுதான் சூரியனை மையமாகக் கொண்டு, பூமி சுற்றுகிறது என்ற புருனோவின் அறிவியல் கண்டு பிடிப்பு.

நோலா டொமினிக்கனிலிருந்து, புருனோ 1579 இல் ஜெனிவா சென்று ஆசிரியராக பணியாற்றினார். மொழியியலிலும், வாதத் திறமையிலும், நக்கல் பேச்சிலும் வல்லவரான இவர் பாரம்பரிய கிறித்தவ கருத்துக்களுக்கும், அரிஸ்ட்டாட்டில் கொள்கைக ளுக்கும் எதிராகப் பேசினார் .16 ஆம் நூற்றாண்டு அறிவியலின் இருண்ட காலம் என்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானிகள் தங்களின் விஞ்ஞானக் கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், ரகசியமாக ஒளித்து வைத்துக் கொண்டு தங்களுக்குள் பரிமாறிக்கொண்ட காலம் அது. அப்போது வாழ்ந்த புருனோ, கலீலியோ போன்ற விஞ் ஞானிகள் வானவியலின் உன்மைகளைச் சொல்லப் பயந்து, பின்னாட்களில் சொல்லியதால் சித்திரவதை செய் யப்பட்ட காலம் இது.

புருனோ பிரான்சிலுள்ள பாரிசில், அரசர் மூன்றாம் ஹென்றியின் ஆதரவுடன் தங்கி இருந்தார் அங்கே பலர் இவருக்கு நண்பரா கினர் இவர்கள் அனைவரும் கடவுள் தொடர்பான மாயமந்திரக் கலையில் நம்பிக்கை உள்ளவர் கள். மாயமந்திரத்துடன், நினைவுக் கலையை பல வடிவங்களில், முறைகளில் சொல்லித் தந்தார். ரேமாண்டுலாலி பற்றியும், நினை வுக்கலையின் அற்புதம் பற்றியுமான இவரின் முதல் எழுத்து வெளியீடுகள் பாரிசில்தான் நிகழ்ந் தன. பின் 1582 இல் புருனோ தன் 34வது வயதில் இங்கிலாந்து சென்றார். அங்கே காஞ் டெலாஜோ என்ற நண்பரின் உதவியுடன், இங் கிலாந்து அரசியை அணுகினார். அவரைப் புகழ்ந்து பேசினார், எழுதினார். இங்கிலாந்தில் 2 ஆண்டுகள் வாழ்ந்தபோதே அவரது சிறந்த எழுத்துக்கள் வெளியிடப்பட்டன. இங்கே பிரபஞ்சம் பற்றிய புதுக்கருத்தினை வெளியிட்டார் இதனால் பெரும் குழப்பம் எழுந்தது.

பிரபஞ்சம் எல்லையற்றது, முடிவற்றது. பிரபஞ் சத்தின் ஒரு பகுதிதான் சூரிய குடும்பம். அதுமட்டுமல் லாமல், பூமி தன்னைத்தானே சுற்றுகிறது, அதனா லேயே இரவுபகல் உண்டாகிறது. சூரியன் என்பது இரவு வானத்தில் தெரியும் விண்மீன் போன்ற ஒன்றுதான். சூரியன் தான் பூமிபோன்ற கோள்களின் மையம். இவையனைத்தும் சேர்ந்தது சூரிய குடும் பம். வானில் தெரியம் விண்மீன்களுக்கும் இதே போன்ற கோள்கள் உண்டு. சூரியக் குடும்பம் என்பது பிரபஞ்சத்தின் அடிப்படை அலகு. விண்மீன்கள் பிரபஞ்ச வெளியில் விரவிக்கிடக் கின்றன.

விண்மீன்கள் இயற்பியல் விதிப்படி இயங் குகின்றன. விண்மீன்களுக்கு இடையே ஈதர் என்ற காற்று உள்ளது, என பல கருத்துக்களை விதைத்தார் புருனோ. உலகில் புவிமையக் கொள் கையை முதன் முதலில் நேரிடையாக எதிர்த்த முதல் தத்துவ ஆசானாக ஜியார் டானோ புருனோ இருந்தார் .

இதனால் இவருக்கான எதிர்ப்புகள் வலுக் கிறது – பல்வேறு மத எதிர்ப்புகளைக் காரணம் காட்டி புருனோ 1585 இல் கட்டாயமாக பாரிசிலிருந்து மீண்டும் வெளியேற்றப்பட்டார். பின் ஜேர்மனி சென்றார். அங்கே இலத்தீன் மொழியில், நினைவுக்கலை தொடர்பாகவும், வானவியல் பற்றியும் கவிதைகள் எழுதினார். 1591 இல் மீண்டும் இத்தாலிய நண்பர்கள் புத்தக சந்தையில் பங்குபெற புருனோவை அழைத்தனர். நினைவாற்றல் கணக்கை சொல்லித்த ரவும், அதன் மாயமந் திரங்களை அறியவுமே புருனோ வரவழைக்கப்பட்டார். அங்குள்ள படுவா என்ற ஊரில் ஆசிரியர் பணிபுரியவும் விரும்பினார். கலீலியோ அங்கு வந்தார். வெனிஸீக்குத் திரும்பினார். நண் பர் மைசிங்கோ எதிர்பார்த்தபடி அவர் மாயங்கள் எதுவும் சொல் லித்தரவில்லை. ஏமாந்த மைசிங்கோ, மதத்துவேம் என்ற போர்வையில் கிறித்தவ திருச்சபையிடம் புருனோவைக் காட்டிக்கொடுத்தார்.

புருனோ கிறித்தவ திருத்ச்சபையை எதிர்த்து பிரச்சாரம் செய்தமைக்காகவும், மதத்துவே கருத்துக்களுக்காகவும் 1592 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் கைது செய்யப்பட்டார். 1593 இல் ரோமிற்கு கொண்டுவரப்பட்டார். அன்றைய போப் மூன்றாம் கிளமெண்டிடம், சமரசம் ஏற்படலாம் என புருனோ நம்பினார். புருனோவின் வாதமும், மொழித்திறமையும் அங்கு எடுபடவில்லை. தோல்வியுற்றார். ரோம் நகரில் 6 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப் பட்டார். அவரை எரித்துக் கொல்லும் தண்டனை நிறைவேற்றப்படும் நாள் பெப்ரவரி 17, 1600. அவரது அறிவியல் செயல்பாடுகளுக்காகவும், மனிதநேயத்துடனும், தண்டனை நிறைவேற்ற வேண்டிய அதிகாரிகள் கொஞ்சம் கருணையுடன் செயல்பட்டனர். புருனோ மேல் இரக்கம்கொண்டு இவர் கழுத்தைச் சுற்றி வெடிகுண்டுப் பொடியைத் தூவினர். இது அதிக வேதனையின்றி, உயிர் முடிய உதவி செய்யும். ஆனாலும்கூட தண்ட னையில் குறிப்பிட்டுள்ளபடி, அவரது நாக்கும், தாடையுடன் சேர்த்து ஆணியடிக்கப்பட்டது, புருனோ பேசாமல் இருப்பதற்காக. ஏசு நிலுவையில் அறையும் போது செய்யப்பட்டது போலவே ஒரு நீண்ட கட்டையில் அறையப்பட்டார் புருனோ, முகத்தில் இரும்புக் கவசம் மாட்டப்பட்டது. இவரைச் சுற்றி குச்சிகள் போடப்பட்டன. இவையனைத்தும் கம்ப்போ டே ப்யோரி என்ற ரோமனின் புகழ்பெற்ற சதுக்கத்தில் அனைவரும் பார்க்கும்படியே நடைபெற்றது. ஜியார்டானோ புருனோ உயிருடன் எரித்து கொலைசெய்யப் பட்டார். கிறித்தவ திருச்சபையில் அவரது உயிர் போயிற்று. ஆனால் அவரின் புகழ் மறையவில்லை.

இத்தாலியில் உள்ள ரோமில் புருனோ கொல் லப்பட்ட இடத்தில் அவருக்காக நோலாவில் சிலை வைக்கப்பட்டது. சந்திரனில் காணப்படும் கிரேட்டர் பள்ளத்தாக்குகளில் ஒன்றுக்கு ஜியார்டானோ புருனோஎன்று பெயரிடப் பட்டுள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானிகளுக்கு வானவியல் பற்றிய விதைகளாக, விளை நிலங்களாக வெளிப்பட்டவை புருனோவின் கருத்துக்களே.

# அடிவருடிகளின் சொற்கேளாமல் ரணில் புகழ்பெறும் விதத்தில் செயற்படவேண்டும்

## வைத்தியர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்துக்கு வருகின்றமை தொடர்பில் தமது தரப்பினருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வந்தவர் என்பதால், அடிவருடிகள் கூறுவது போல் உரையாற்றவும் வேலைகளை செய்யவும் வேண்டாம் என ராஜித சேனாரத்ன, ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இறுதிக்காலத்தில் முக்கியமாக புகழைத் தரக் கூடிய விதத்தில் செயற்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் செய்த தவறுகள் அழிந்து போகும் விதத்தில் நற்பெயரை சம்பாதித்துக் கொள்ளுமாறு யோசனை முன்வைக்கின்றோம். இதனை விடுத்து மோதுவது என்று எண்ணிக்கொண்டு வந்தால், மோத முடியாது என்பதை ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

50 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியுடன் தனித்து மோத முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அண்மையில் வந்தவர்கள் கூறும் விதத்தில் செயற்பட மாட்டார் என நம்புகிறோம்.

54 பேர் இருக்கும் இடத்துக்கு வேறு கட்சியில் இருந்து ஒருவர் வந்தால், அவரை தலைவர் எனக் கூறும் அளவுக்கு தலையில் சுகவீனத்தை ஏற்படுத்தும் தொற்றுநோய் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவருக்கும் இல்லை எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# தென்கொரியாவில் இருக்கும் இலங்கையர்களை உடன் நாடு திரும்புமாறு அறிவுறுத்தல் விடுப்பு

தென் கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்களை உடனடியாக நாடு திரும்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தென் கொரிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு ஒப்பந்த காலத்தில் பணிபுரிந்த சுமார் 2 ஆயிரம் இலங்கைத் தொழிலாளர்கள் தங்களது வேலைவாய்ப்புக் காலம் காலாவதியான பின்னர் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர் எனத் தென்கொரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இலங்கையர்கள் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள காலப்பகுதியில், இலங்கைக்கு புதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்பட மாட்டாது என்று தென் கொரிய அரசு இலங்கையிடம் கூறியுள்ளதாக கமல் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இது தற்போது வேலைவாய்ப்பு சலுகைகளைப் பெறும் என்று நம்புபவர்களையும் பாதிப்பதுடன், எதிர்காலத்தில் அதிக எண்ணிக்கையிலான வேலைகளை இழக்கும் அபாயத்திற்கு வழிவகுக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டவிரோதமாகத் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்பாவிட்டால், அவர்கள் சார்பாக உத்தரவாத ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், கேள்விக்குரிய தொழிலாளி மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தென் கொரியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கைத் தொழிலாளர்களை உடனடியாகத் திருப்பி அனுப்புமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே கோரியுள்ளார்.

# இலங்கை – இந்தியாவுக்கு இடையில் பாதுகாப்பு கூட்டுறவு தொடர்பில் பேச்சு

பாதுகாப்பு கூட்டுறவு தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்னவுடன் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்த பேச்சை நடத்தியுள்ளார். பாதுகாப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த சந்திப்பு நடத்தப்பட்டது.

கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி மற்றும் புலனாய்வுப் பிரிவு பிரதானி உள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால உறவுகள் தொடர்பாகப் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீண்ட காலமாக இரு நாடுகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ பயிற்சிகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் முற்கூட்டியே எச்சரிக்கை!

## சிங்கள ஊடகம் தகவல்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் இலங்கைக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தமை தெரியவந்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானிய உளவுப் பிரிவினர் இந்தத் தாக்குதல் முயற்சி தொடர்பில் முன்கூட்டியே இலங்கைக்குத் தகவல் வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் தொலைத்தொடர்பு வலையமைப்பை ஒட்டுக் கேட்டதன் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாகிஸ்தான் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருந்தது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை தொடாபில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பேசிக் கொள்வதாக இலங்கை அதகாரிகளுக்கு பாகிஸ்தான் உளவுப் பிரிவு எச்சரிக்கை விடுத்திருந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் தூதுவர் மேஜர் ஜெனரல் மொஹமட் சத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இந்தியா தகவல்களை வழங்கியிருந்தது என முன்னதாக அறிவிக்கப்பட்ட நிலையில் பாகிஸ்தானும் தாக்குதல் தொடர்பில் எச்சரித்திருந்தது என சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மூன்று மாதங்களுக்குத் தேவையான டொலர்களே கையிருப்பில் உள்ளன

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

நாட்டுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு தேவையான இறக்குமதிகளுக்குச் செலுத்துவதற்கு மாத்திரம் போதுமான அந்நிய செலாவணியே இலங்கையின் கையிருப்பில் இருக்கின்றன என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் உத்தியோகபூர்வமாக 400 கோடி டொலர்கள் மட்டுமே கையிருப்பில் இருக்கின்றன என இலங்கை மத்திய வங்கியின் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர தெரிவித்துள்ளார்.

சீனாவின் மத்திய வங்கியிடம் இருந்து 150 கோடி அமெரிக்க டொலர்கள் பரிமாற்ற வசதிகளுக்காக கிடைத்ததுடன் இந்தத் தொகை நாட்டுக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான இறக்குமதிக்கு மாத்திரமே போதுமானது.

இதனைத் தவிர இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளிடம் இருந்து அந்நிய செலாவணி பரிமாற்ற வசதிகள் கிடைத்துள்ளன எனவும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 78 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளன எனவும் அமரசேகர குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவை விடவும் கொவிட்டில் இலங்கையின் நிலைமை மோசம்

எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும்போது தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை இந்தியாவை விட இலங்கையில் குறைவாக இருந்தாலும், சனத்தொகையின் அடிப்படையில் நோக்குகையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கள் இந்தியாவை விடவும் மோசமான நிலையில் உள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியநிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் கொவிட் வைரஸ் தொற்றின் தீவிரம் அதிகரித்துவருவதாக நாம் தொடர்ச்சியாகக்கூறி வருகின்றோம்.

தொற்றால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், மரணங்களுக்கான காரணம் மற்றும் நோயின் பரவல் ஆகிய விடயங்கள் தொடர்பில் பகுப்பாய்வு செய்ய வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றோம். - என்றார்.

# புல்மோட்டையில் சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம் வெளியிட்டது குடும்பம்

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிராமத்தில் இருந்து கடந்த புதன்கிழமை நந்திக்கடலுக்கு தொழிலுக்குச் சென்றவரை காணவில்லை என உறவினர்கள் தேடியுள்ள நிலையில் வியாழக்கிழமை பச்சைப்புல்மோட்டை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மரண விசாரணை அதிகாரிகள், தடயவியல் பொலிஸார் ஆகியோர் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றுள்ளதுடன், இவரின் உயிரிழப்பு தொடர்பில் மன்றுக்கு அறிக்கையிடுமாறும் பணித்துள்ளார்.

குறித்த நபர் நந்திக்கடலுக்கு செல்லும் வீதியை விட்டு பற்றை ஒன்றுக்கு அருகிலேயே சடலமாக காணப்பட்டுள்ளார் இவரது மரணம் தொடர்பில் குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.



சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதுடன், மரண விசாரணை அதிகாரியின் அறிக்கையின் பின்னர் உயிரிழந்தவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2021இல் வெளியிடப்பெற்றது.